பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆவணி 28உ (13 9—67) புதன் ★ வெளியூர் : ஆவணி 29உ (14—9—67) வியாழன் [இதழ் : 76

முதலாளிகள் நியமிக்கும் தொழிலாளர் நல அதிகாரிகள்

நம்பிக்கைக்குரிய வகையில் பணியாற்றவில்லை

சென்னை, செப். 9—

"நிர்வாகத்தினரின் கீழ் தொழிலாளர்நல அதிகாரிகள் பணிபுரிந்துவரும் ஏற்பாட்டில் நான் நம்பிக்கை இழந்துவிட்டேன்; இதற்காக இந்த அதிகாரிகளைக் குறை சொல்வதற்கில்லை. அவர்களை நியமிப்பதன் நோக்கமே தொழிலாளருக்குச் சேவை புரிவதுதான்; ஆனால் அவர்களால் தொழிலாளருக்குச் சேவை செய்ய முடிவதில்லை என்பதுதான் இப்போதுள்ள நிலவரம்.

"தொழில் தகராறுகளின்போது பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் இந்த அதிகாரிகள் மீது புகார்கள் செய்துள்ளனர்"

என்று சட்டத் துறை அமைச்சர் செ. மாதவன் இங்கு ஒரு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தொழிற்சாலைகளில் தொழிலாளர் நல அதிகாரிகளை நிர்வாகத்தினர் நியமிக்க வேண்டுமா அல்லது அரசு நியமிக்க வேண்டுமா என்பது பற்றி அரசு ஆய்வு செய்துவருகிறது.

"தொழிலாளர் தலைவர்களுக்குச் சாதாரணமாகத் தொழிலாளர் நலச் சட்டங்கள் தெரிந்தே உள்ளன; ஆனல், அவர்கள் பெரும்பாலும் அரசியல் காரணங்களை உத்தேசித்துக் காரியங்களைச் செய்துவருகின்றனர். இறுதியில் தொழிலாளர் பிரச்சினைகளை அவர்களால் தீர்த்துவைக்க முடியாமல் போய்விடுகிறது."

பணக்காரர் கொழுத்தனர்-- ஏழைகள் நலிந்தனர்!

இருபதாண்டுக் காங்கிரசு ஆட்சியின் சாதனை

காங்கிரசுக்காரர் தரும் சான்று

ஐதராபாத், செப். 10—

"சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கக் காங்கிரசு மறுத்ததே அதன் தோல்விக்குக் காரணம்"

என்று டில்லி மாநில முன்னாள் காங்கிரசு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. சௌத் ரிபிரம்ம பிரகாஷ் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"சமத்துவ சமுதாய அமைப்பை உருவாக்கக் காங்கிரசு தவறியதால்தான் கடந்த தேர்தலில் பல மாநிலங்களில் தூக்கியெறியப்பட்டது.

"கடந்த இருபதாண்டுக் காலத்தில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர் ஆயினர்; செல்வமெல்லாம் பணக்காரர்களிடமே குவிந்தது. ஏழைகள் மேலும் ஏழைகளாயினர்!"

துயர்துடைப்பு நிதி!

தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் துயர் துடைப்பு நிதிக்கு செப். 9-ம் நாள்வரை மொத்தம் ரூ. 25,29,309.42 சேர்ந்துள்ளது.

அதிசயம் பாரீர் --- அவலம் கேளீர்

அந்நிய ஆக்கிரமிப்பு நாட்டின் ஓர் அங்கமாகிறது---இந்த அநியாயம் வேறெங்கே நடக்கும்?

'அங்கே சில ஆயிரம் மைல்--இங்கே சில ஆயிரம் மைல்' என்றர் தந்தை!

சீன ஆக்கிரமிப்பு எப்போதும் இருப்பதுதானே--இதில் புதிதாக என்ன இருக்கிறது?' என்கிறர் இந்திரா?

ஓரிரு நாட்களுக்கு முன்னர், மீண்டும் நாதுலா பகுதியில் பீரங்கி முழக்கமும், அத்து மீறிய ஊடுருவலும் நிகழ்த்திய சீன ஆக்கிரமிப்பாளர்களைப் பற்றித் தலைமையமைச்சர் இந்திரா, செய்தியாளர்களிடம் என்ன பேசியிருக்கிறர் தெரியுமா?—

"புதிதாக ஏற்பட்டுள்ள அபாயங்கள் ஏதுமில்லை---
சீன அபாயம் எப்போதும்
இருந்து வரும் அபாயம்தான்"

செஞ்சீன முதன்முதலில் ஆக்கிரமிப்பு நடத்தியபோது, இவரது தந்தை என்ன சொன்னர் தெரியுமா?—

"மனிதப் பூண்டே இல்லாத வெறும் பிரதேசம்; இங்கே சில ஆயிரம் மைல்--- அங்கே சில ஆயிரம் மைல் ஆக்கிரமித்துள்ளனர்; அவ்வளவுதான்"

என்றர்—இழந்திருக்கும் இருபதாயிரம் மைலுக்கு மேற்பட்ட இந்திய மண்ணைப் பற்றி!

தந்தையின் பாதையில் இந்திராவும் போகிறர்!

'சீன அபாயமோ, ஆக்கிரமிப்போ எப்போதும் இருப்பதுதானே? அதற்கு நடுவில் இருக்கப் பழகிக்கொள்ளுங்கள்" என்று கூறுகிறர்!

'பெற்ற சுதந்தரத்தை — பிறந்த பொன்னட்டைப் பேணிக் காப்பதற்குக் காங்கிரசால் மட்டுமே முடியும்' என்று இங்கு காமராசரும், மற்றவர்களும் பேசுகிறர்களல்லவா—அப்போது 'இந்திரா என்ன இப்படிப் பேசியிருக்கிறரே' என்று திருப்பிக் கேளுங்கள்!

—'பாக்சர்'

தென் சென்னை தேர்தல் நிதி ரூ. 51

அமைச்சர் கருணநிதியிடம் அளிக்கப்பட்டது

சென்னை, செப். 13—

இன்று இராயபுரத்தில் நடைபெற்ற புது மனை புகு விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் மு. கருணநிதி அவர்கள், புதிய இல்லத்துக்கு, 'குறளகம்' என்று பெயர் சூட்டிய தன் நினைவாக இல்லத்துக்குரிய தோழர் என். எஸ். இராசு அவர்கள், அமைச்சரிடம் ரூ. 51 அளித்து, அத்தொகையை தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதித் தேர்தல் நிதிக்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அதனைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார்.

'குடிசை'க்குப் பொருள்!

"குடி இருக்கும் இல்லத்திற்குக் 'குடில்' என்று பெயர் வந்தது. அதே போல் தான், 'குடிசை' என்ற பெயரும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

"குடி இருப்பதற்கு இசைந்த இடம்—அதாவது, வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும், குடியிருப்பதற்கு இசைவான இடமாக ஆக்கிக் கொண்டிருப்பதற்குத்தான் 'குடிசை' (குடி+இசை) என்ற பெயரிட்டார்கள் போலும்!"

--அமைச்சர் கருணநிதி
(சென்னை — இராயபுரம் புதுமனை புகு விழாவில்)

சுடச்சுட!

மழையாம்... வெள்ளமாம்... கூட்டமாம்!

"காலையில் மழை பெய்தும் கூட, மக்கள், வெள்ளமெனத் திரண்டு வந்திருந்தனர். கூட்டம் 9-45 மணிக்குத் துவங்கியது. நுழைவுக் கட்டணமாக வசூலான தொகை ரூ 800."

—'வெண்புரு சேனை' நிதி வசூல் கூட்டம் பற்றி 11..9..67 'நவசக்தி' செய்தி.

ஞாயிறன்று காலை மழையே கிடையாது-.வானம் மப்பாக இருந்தது—அதுவும் பத்து மணி வரையில்தான்! ஒரு சில தூறல்கள் விழுந்தன— அதுவும், காலை 6-மணி வரையில்தான்!

ஆனல் செய்தி கூறுகிறது– 'மழை பெய்தும்' என்று!

பெய்தது 'மழை' அல்லவா? எனவே மக்கள், 'வெள்ள' மெனத் திரண்டு வந்தனர்! திறந்தவெளிக் கூட்டமல்ல– ஒற்றைவாடைக்கு உள்ளேதான்!

'மழை'க்கு அஞ்சாது வெள்ளமெனத் திரண்டுவந்த மக்கள், கட்டணமாகக் கொடுத்த தொகை என்ன தெரியுமா?—

ரூ. 800!

இதில், ரூ. 5 மதிப்புள்ள டிக்கெட்டுகள் ஏற்கனவே 'தள்ளப்பட்டு' இருக்கின்றன! 50 காசு டிக்கெட்டு கொடுத்து மழைக்கு அஞ்சாது வெள்ளமென வந்தவர்கள் கொடுத்ததுதான் எஞ்சிய தொகை!

எதையோ நினைத்துக் கொண்டு செய்தி போடப் போய், அது எப்படி எப்படிப் பாதிக்கிறது பார்த்தீர்களா?

—'பாக்சர்'

செப். 15-ல் மூடிய பஞ்சாலைகள் திறக்கப்படும்

திருச்சி, செப். 12—

கோவையில் மூடப்பட்டுள்ள ஒன்றிரண்டு பஞ்சாலைகளைத் தவிர மற்ற ஆலைகள் எல்லாம் வருகிற வெள்ளிக்கிழமையன்று திறக்கப்படும்"

என்று தமிழக சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த ஆலைகளைத் திறப்பதற்கான ஆணையை அரசு ஏற்கனவே பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

திருவாளர் சந்தேகம்

இப்போது இரண்டாவது முறையாகப் பேசிவிட்டார் காமராசர்—'இளைஞர்களுக்கு வழிவிடுங்கள்' என்று!

ஒன்றை உற்றுக் கவனித்தீர்களா?—'வழி விடுங்கள்' என்றுதான் கூறியிருக்கிறரே தவிர, 'வழிவிடுவோம்' என்று தெரிவிக்கவில்லை!

காங்கிரசில் தன்னையும் ஒரு காளைப் பருவத்துக்காரராக நினைத்துக்கொண்டாரா அல்லது வேண்டுகோள் தன்னை நீக்கிய மற்றைய முதியவர்களுக்கா என்பது தெரிய வேண்டும்!

'புதியவர்களுக்கு வழி விடுங்கள்' என்ற இந்தப் போதனையை, காங்கிரசுக் கட்சி இங்கே பதவியில் இருந்த போது கூறியிருந்தால், 'சபாஷ்' போட்டிருக்கலாம்!

"கட்சி வேலைக்கு ஆள் தேவைப்படுகிறது; களைத்துப் போன பக்தவத்சலங்களினல் ஏதும் முடியாது" என்ற நிலை வந்த பின்னர்தானே, 'இளைஞர்களுக்கு வழிவிடுங்கள்' என்கிறர்?

"நான் என்றல், உங்களுக்கு அப்போதும் ஆகாது— இப்போதும் ஆகாது; அவ்வளவு இளக்காரம்—அப்படித் தானே?' என்று முதியவர் பக்தவத்சலம் கோபித்துக் கொள்ள மாட்டாரா என்ன?

"பசங்களா! பெண்கள் குளிக்கும் இடத்தில் உங்களுக்கு என்னடா வேலை?" என்ற கர்ச்சனை பிறக்கும்— யாரிடமிருந்து தெரியுமா?— ஓர் ஆண் பிள்ளையிடமிருந்து!

'நந்தி மறைக்கிறதே' என நந்தனர் துணுக்குற்றதில் பொருள் இருக்கிறது!

ஆனல், தில்லை திட்சதர் ஒருவர் குறைபட்டுக்கொண்டார் என்றல், 'இது என்ன— கல்வாணரின் 'நந்தனர்' சரித்திரத்துக்கே ஒரு திருந்திய பதிப்பா?' என்றுதானே கேட்கத்தோன்றும்?

"நாமெல்லாம் பழைய பரம்பரை! இளையவர்களுக்கு வழி விடுவோம்" என்று 'தன்மை'யை உள்ளடக்கிய 'பன்மை'யில் பேசியிருக்க வேண்டியவர் — 'பாம்பை அடிக்க ஆண் பிள்ளையே இல்லையா' என்று மனைவி இடித்ததன் பயனக வெளியே வந்து வீரக் குரல் கொடுக்கும் கணவனைப்போல் – 'பெரியவர்களெல்லாம் சற்று அப்பால் போங்களேன்; இளைஞர்கள் வரட்டும்' என்று மன்றடிக் கேட்டுக்கொண்டிருக்கிறராம்— மதுரை ஊழியர் கூட்டத்தில்!

காங்கிரசே மீண்டும் பதவிக்கு வந்திருந்தால் இப்படிக் கூறியிருப்பாரா என்பது சந்தேகம்தான்!

ஒருவேளை, 'சேனை', 'சேனை' என்று ஏதேதோ பேசுகிறர்களே—அதற்கு, 'பல் போனவர்கள், வயதானவர்கள் ஆகியோரை வைத்துக் கொண்டு என்ன செய்வது' என்ற யோசனையின் காரணமாக, 'இளைஞர்களுக்கு வழி விடுங்கள்' என்று சூசகமாகப் பேசுகிறரோ என்று கூட யூகிக்க வேண்டியிருக்கிறது!

'மிலிட்டரி'யில் பிரியப்பட்ட காமராசர், இராணுவத்துக்கு ஆள் எடுப்பவர்களைப்போல், 'இளைஞர்கள் — இளைஞர்கள்' என்று தேவையைத் தெரிவித்திருப்பதிலும் ஒரு பொருத்தம் இருக்கத்தான் செய்கிறது!

"நீங்கள் வேண்டுமானல் என்றும் பதினறுக இருங்கள்; நான் ஒன்றும் இளைஞனல்லன்" என்று பக்தவத்சலம் போன்றவர்கள் அவருடன் ஊடல் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

—எஸ். ஆர்.

மலேசியா தி. மு. கழகமும் தமிழகத் தி. மு. கழகமும்

அகதிகட்கு உதவுவதில் தமிழர்கட்கு அந்தி

'மத்திய அரசுடன் போராட வேண்டும்'

செட்டிநாட்டரசர்மனைக்குமுறல்

காரைக்குடி, செப். 10—

"பர்மா, மலேயா, இலங்கை போன்ற வெளிநாடுகளிலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு, வடநாட்டு அகதிகளுக்குச் செய்ததுபோல் மத்திய அரசு எந்தவித சலுகையும் செய்யவில்லை; இதற்காக மத்திய அரசுடன் நாம் போராடியாக வேண்டும்"

என்று செட்டிநாட்டரசர் திரு. எம். ஏ. முத்தையா (செட்டியார்) இங்கு நடந்த இந்து மகாமோன சங்கப் பொன் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். (இந்த விழாவில் அறிஞர் அண்ணு அவர்களும் கலந்துகொண்டு குறிப்பிடத்தக்கது).

திரு. முத்தையா அவர்கள் மேலும் பேசுகையில், தமிழ் மொழியைக் காப்பாற்ற ஆங்கிலம் நீடித்திருந்தாக வேண்டும் என்றும், ஆங்கிலம் ஒழிக்கப்பட்டுவிட்டால் தமிழை இந்தி அகத்துக்கொண்டு போய்விடும் என்றும் எச்சரித்தார்.

சட்டம்--அமைதி குலைந்துவிட்டதாம்

கூறுபவர் பக்தவத்சலம்!

"இன்று தி. மு. கழகம் நாட்டு மக்களிடையே செல்வாக்கு இழந்துவருகிறது; இந்த சமயத்தில் நாம் மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்ள வசதி இருக்கிறது; இதைக் காங்கிரசார் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

"ஆறு மாத காலத்தில் தி.மு.க. ஆட்சி நிர்வாகத்தினுல் சட்டம்—ஒழுங்கு—அமைதி சீர்குலைந்துவிட்டன. இத்தற்முன்பு இருந்த காங்கிரசு ஆட்சியில் சட்டம்—ஒழுங்கு சீராக இருந்ததைக் கண்டு காங்கிரசு பெருமை கொள்கிறது."

இப்படிக் கூறியிருப்பவர் யார் தெரியுமா? சட்டம்—ஒழுங்கு—அமைதிக் காவலரான சாட்சாத் பக்தவத்சலம்தான்!

இதனை அவர், தஞ்சையில் நடந்த காங்கிரசு ஊழியர்கள் கூட்டத்தில் கூறுகையில், அங்கு கூடியிருக்கிறவர்கட்கு முணுமுணுப்பும் முனகலும் ஏற்பட்டனவாம்!

ஆபாச ஒழிப்புக் குழு

அமைச்சர் சத்தியவாணிமுத்து அறிவிப்பு

சென்னை, செப். 10—

திரைப் படங்களிலும், சுவரொட்டிகளிலும் 'ஆபாச'த்தைத் தடுக்கத் தமிழக அரசு ஒரு குழுவை யியமித்துள்ளது.

அந்தக் குழுவில் யார் யார் இருப்பார்கள் என்பதை செய்திக் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அறிவித்துள்ளார்.

அந்தக் குழுவில் இருப்பவர்கள் விவரம் :—

திருமதி சத்தியவாணிமுத்து (செய்தித்துறை அமைச்சர்).

திரு. கெங்கார (வருவாய்த்துறை வாரியத்தின் முதல் உறுப்பினர்)

காவல்துறை அதிகாரி ஒருவர் (ஆபாச ஒழிப்புப் பொறுப்பில் இருப்பவர்).

படத் தயாரிப்பாளர் இருவர்.

நடிகர் நடிகையர் சார்பில் ஒருவர்.

திரைப்பட அரங்குகளின் உரிமையாளர்கள் சார்பில் இருவர்.

திரைப்பட வெளியீட்டாளர்கள் சார்பில் இருவர்.

மற்றும் இக்குழுவில் மேலும் சிலரைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும் அரசு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கெரார்டு நெர்வல் என்ற பிரெஞ்சுக் கதையாசிரியர், நம் மிடையே அவ்வளவு பிரபலமானவர்லர். அவருடைய கதைகளில், மனிதனின் பித்துக்குளித்தனம் பிரமாதமாகப் படம் பிடித்துக் காட்டப்படும். பழிவாங்கும் உணர்ச்சியும், அவதூறு செய்வதில் சிலர் காணும் தனி ஆனந்தமும் அவற்றில் 'பச்சை'யாகப் பரிமாறப்படும்.

அப்படிப்பட்ட கதையொன்றில், திருடன் ஒருவன் நீதி விசாரணை முன் நிறுத்தப்படுகிறன் ; குற்றமும் மெய்ப்பிக்கப்படுகிறது. அவனுடைய கரம ஒன்றை வெட்டிவிடும்படி நீதிபதி தீர்ப்பு வழங்குகிறார் !

சட்டத்தின் வேலே இத்துடன் முடிந்துவிடுகிறது ; ஆனல், வெட்டப்பட்ட அந்தத் திருடனின் கரம, நீதிபதியைத் தொடர்ந்து செல்லுதது—காளரிவில் அவர் கழுதையைத் திருகிச் சாகடித்துவிடுகிறது ! இதுதான் கதையின் கரு !

வெட்டப்பட்ட வேருெருவர் கரம், உயிருள்ள மற்ருெரு மனிதனுக்கு வினயாக வாய்க்குமா ?—ஏன் ஆகாது ?—'உண்மையே எழுதுகிறேன்' என்று நினைக்காத எழுத்தாளன் உண்டா ?

இதில்—தொடர்ந்து சென்று கழுத்தைத் திருகிச் சாகடித்து, வெட்டப்பட்ட திருடனின் கரம அல்ல ; மனிதனுக்குள்ள பழிவாங்கும் வினவுணர்வின் 'சர்வ வியாபகச்' சக்தியே அப்படிச் செய்ததாக நாம் கொள்ளவேண்டும்.

'பழி வாங்குவது மனிதனுக்குள்ள உரிமை' என்று மாக்சிம் கார்க்கி பெருமளவு வாதிடலாம். அவர் கால இரஷ்யாவின் நிலை அது !

டிராட்ஸ்கி, மெக்சிகோ நாட்டுக்குக் கனத்துச் சனத்து ஓடி ஒளிந்த பின்னரும், ஸ்டாலினுக்கு இருந்த பழிவாங்கும் உணர்வு குறைந்ததா ? டிராட்ஸ்கியைக் கோடரியால் வெட்டி வீழ்த்திய பின்பு அல்லவா ஸ்டாலினின் பெருமையும், பதவியும் நிலைத்ததாகக் கொள்ளப்பட்டன ?

சர்வாதிகாரப் போட்டியில் வெற்றி பெற்ற ஸ்டாலின் போன்றவர்களுக்கு மட்டுமே இந்தப் பகைமைவெறி பழக்கமாகிப் போகவில்லே ; சனநாயகத் தோற்தலில் தோல்வி கண்ட காங்கிரசுக் கட்சிக்கும் இந்தப் பழிவாங்கும்வெறி பற்றிக்கொண்டு விட்டிருக்கிறது !

அதிகார வெறி, மனிதனே விலங்காக்கிவிடவது சாத்தியமே ; ஆனல், அது மோப்பம் பிடித்துத் தேடி ஓடி ஆபீரம் மைல்களுக்கு அப்பாலும் தன் வேட்டையைத் தவங்கும் என்பதைக் காங்கிரசுக் கட்சியினரிடத்தில் அப்பட்டமாகக் காண்கிறோம்!

ஸ்டாலினின் நக்கசக் கரம் மெக்சிகோ வரையில் ரீண்டு, டிராட்ஸ்கியைச் சாகடித்தது !

காங்கிரசுக் கட்சியின் நாசகாரப் பிரச்சாரம், மலேசியா—சிங்கப்பூர் வரையில் பிரசித்தமாகிக் கொண்டிருக்கிறது !

தமிழகத்தில் கழகத்திடம் தோற்றுப் போன காங்கிரசுக் கட்சி, தொலேநோக்குள்ள தமிழர்களிடையே, அங்க கூடி யாகளிடமிருந்தே முணுமுணுப்பும் முனகலும் ஏற்பட்டனவாம் !

சிங்கப்பூரிலும், மலேசியாவிலும், கடந்த 15 ஆண்டுகளாமாக, 'தீராவிட முன்னேற்றக் கழகம்' எனும் அமைப்புகள் இருந்து வருகின்றன.

அந்தந்த நாட்டின் சட்ட திட்டப்படி, அரசியல் கலவாத கலாச்சார அமைப்புகளாக அவை பதிவுசெய்யப்பட்டுத் தமிழ்த் தொண்டும், தமிழ்ராளின் நலன் பேணும் நற்காரியங்களும், அங்கு செவ்வனே செய்துவருகின்றன.

இங்கு இருப்பதுபோல், சனிக்கிழமை இரவு அரைத் தூக்கத்தில் எனவு கண்டு ஞாயிறன்று காலே ஒரு 'சேரின்'யையோ, கட்சியையோ அங்கெல்லாம் உருவாக்கிவிட முடியாது !

ஆகவே, பதிவுசெய்யப்பட்ட போது அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு மாருக எந்த அமைப்பாவது நடந்துகொள்ளுமானல், அங்கு அடுத்த நாளே அந்த அமைப்பு மூட்டை கட்டிக் கொள்ள வேண்டியதுதான் !

ஆனல், பதிவு செய்யப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு, பல்லாண்டுகளாக அங்கு இருக்கிறது !

அங்கு, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பேரால் மட்டுமல்ல — 'மலேசியா இந்தியர் காங்கிரசு' என்ற பேராலும் அமைப்பு இருக்கிறது.

கழகத்தின் பெயரை வைத்துக் கொண்டுருப்பதாலேயே, அங்குள்ள அமைப்பு, 'கேடு பயப்பது' என்று பேசப்படுமானுல், இந்தியக் காங்கிரசின் பெயரைத் தங்கிக் கொண்டுள்ள அமைப்புப்பற்றி ஏன் இங்குள்ள பத்திரிகைகளின் செய்திமில் இடம் பெறக் காணேம் ?

தமிழகத்தில் காங்கிரசு ஆதிக்கம் சாய்ந்துவிட்டது ! இலி அது எந்த நாளிலும் தலை தூக்க முடியாது ! சர்வாதி காரத்துக்கு வித்திட்ட அந்தக் கட்சிக்குத் தமிழர்கள் சாவு மணி அடித்துவிட்டார்கள் !

மலேசியக் காடுகளில் ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகள் செய்து வந்த அட்டூழியத்தைப்போல், காங்கிரசுக் கட்சி, தமிழ் நாட்டிலேயே பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது !

கம்யூனிஸ்டுகளே எதிர்த்து போராடிய துளை அனுபவத்தை, மலேசியத் தலைமையமைச்சர் துங்கு அப்துல் ரகுமான் அறிந்திருப்பார் ; அது எத்தகைய சங்கடமான பணி என்பது அவருக்குத் தெரியும். அந்தப் பணிக்கு மக்களை முன்னேறி அழைத்துவந்த அவரது எவ்வளவு நேவைப்பட்டது என்பதையும் அவர் கண்டிருக்கிறார்.

ஆகவே, அறிஞர் அண்ணு அவர்கள், இங்கு காங்கிரசு சர்வாதி காரத்தை வீழ்த்துவதற்கு எடுத்துக்கொண்ட உழைப்பும், தீரட டிடி மக்கள் ஆதரவும் அவருக்குத் தெரியாமல் போகா !

தமிழகத்தில் உள்ள மக்களே ஒன்று திரட்டவே பெரும்பாடுபட்ட அறிஞர் அண்ணு அவர்களுக்கும், கழகத்தின் மற்ற தலேவர்களுக்கும் மலேசிய மக்களின் 'விசுவாசத்தை'த் தடமாறச் செய்யவேண்டிய நிர்பந்தம் மேரமும் இருந்திருக்க முடியாது என்பது, ஆசியாவிலே இப்போது முதற் சனாயக அரசியல்வாதியாக விளங்கும் துங்கு அவர்களுக்குத் தோன்ருமற போகாது !

அதேபோல், சிங்கப்பூரின் தற்போதைய தலேமையைச்சர்களுான அவர்களும், ஆசியாவின் இரசதந்திரிகளில் சிறப்பான இடம் வகிக்கக்கூடியவர்.

சின்னஞ் சிறு சிங்கப்பூரை, சிறந்த காடுகளில் ஒன்ருக ஆக்கி ஆட்சி புரியும் அரசிட மிருந்து, இங்குள்ள மிசசம் மீதி காங்கிரசுக் கட்சிக்காரர்கள் நிர்மம்பப் பாடம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனல், ஆதிக்க வெறி பிடித்தோருக்கு, பாடம் புகட்டுவதே இல்லே ! பசப்பும், பயமுறுத்தலும், பழிவாங்கும் செயல்களுமே அவர்களுக்குப் பழக்கமாகிப் போனவை !

தி. மு. கழகம் தமிழ் நாட்டில் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது காங்கிரசுக் கட்சிக்குச் சகிக்கமுடியாத அவமானமாகப் போயிவிட்டதென்ருல், மீண்டும் அதிகாரத்தைப் பிடிப்பதற்குத் தமிழகத்தில் போராடித்தான் கழகத்தைத் தோலவி காணச் செய்யவேண்டும் ; அதுதான் அரசியலுக்குள்ள அழகு—பண்பு ; ஆனல், 'கழகத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்கியே அதன் பேரில் மக்களுக்குள்ள அபிமானத்தைக் குறைத்து விடலாம்' என்று காங்கிரசுக் கட்சி பகற் கனவு கண்டுவருகிறது.

எந்தவிதமாக வெளியிடும் பொய்யை செய்கினலும், 'தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்களை என்று செல்லப்படுகிறதா—'தி. மு. கழகத்தவர்களே செய்தனர் என்று தெரியவருது' —'கழக ஆட்சியில் பயங்கரம் ; கணவன் மனைவி சண்டை'—'கழக ஆட்சியின் அவலம் பாரிர் ; கல்லூரி மாணவன் காரில் அடிபட்டு மாண்டான்' என்பன போன்ற முட்டாள்தனமாக எதற்கும் கழகத்தையும்—கழக ஆட்சியையும் முடிச்சுப் போட்டுப் பிரச்சாரம் செய்வதிலேயே காங்கிரசுக்கு ஆதரவு நிரண்டுமே

என்று கருதிக் கொண்டுள்ள அற்பத்தனமான அரசியலின் நெடி, மலேசியா—சிங்கப்பூர் வரையிலும் பரவியிருவதைக் கண்டு நாம் பிரிப்பதா ? அல்லது அழுவதா ?

அமெரிக்கக் குளு-கிளக்ஸ்-கான் குழுவினர், கறுப் பர்களேத் தேடித் தேடி வேட்டையாடியதைப்போல்—மத்தியப் பிரதேசத்து ராஜ்ரி நகரில் காங்கிரச இந்தி வெறியர்கள், சிறுபான்மை மக்களேப் பார்த்துப் பார்த்துக் கொலே செய்ததைப் போல்—தமிழ் பேசுவோர் இருக்கும் இடங்களிலெல்லாம் நாடிச்சென்று பழிவாங்கக் காங்கிரசுக் கட்சி துடிக்கிறதா ? இந்த மிருக வெறிக்குக் காங்கிரசு டெல்லி அரசாங்கமும் முழுச் சம்மதம் அளித்து விட்டதா ?

இல்லேயென்ருல், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கால் தூண்டப்பட்டு, சிங்கப்பூர்—மலேசியா அரசியல மன்றங்களில் கழகத்தை இழித்தும் பழித்தும் பேசப்படுவதற்கு அங்குள்ள இந்தியத் தூதுவர் இதுவரை எதற்குக்கொண்டாடவுக்கை என்ன ? மலேசியாவிலுள்ள சுப்பாலு, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரால் இயங்கும் அமைப்புகளுக்கு அவரது அலுவலகம் ஆதரவு அளிப்பதை அங்குள்ள அரசியல் வாதிகள் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருப்பது குறித்து அங்குள்ள நமது தூதுவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் ?

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்றவற்றில், 'திராவிட—முன்னேற்றக் கழகம்' என்ற பெயரால் இயங்கும் அமைப்புகளுக்கும — தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான அரசியல் தொடர்பும் இல்லே என்று பலமுறை பலவிடங்களில் அறிஞர் அண்ணு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மலேசியாவில் சாதாரண அரசியல்வாதி ஒருவர், கழகத்தைப் பற்றித் தவருகப் பேசுவதை இந்தியாவில் சரியாக விளம்பரம் ஆகாமாறு பார்த்துக்கொள்ளும் இந்திய அரசாங்கம், இந்தியாவின் பொறுப்புள்ள அரசியல் வாதிகளில் தலேயாய அறிஞர் அண்ணு அவர்கள் பலமுறை தெரிவித்த விளக்கத்தை, அங்கு தெரிவிக்காததன் நோக்கம் என்ன ?

சர்வாதிகாரத் திமிரும், ஆக்கிரமிப்பு ஆசையும் தலேக்கேறித் தடுமாறும் சிறுவிஷ்தான நமது தூதுவர்கள் அவமானத்திற்குள்ளாகிச் செயலாற்றுத் திருப்பு கிறார்கள் !

சனாயகமும், அரசியல் பண்பும், மனிதத் தன்மையும் கலந்துறவாடும் மலேசியா—சிங்கப்பூர் நாடுகளிற்கூட அவர்களது ஒழுங்காகச் செயற்கை அறிவிக்கா மல் உறவுகிக் கொண்டிருப்பர் னேன் ?

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற அமைப்பை, அங்குள்ள அரசியல் விரிசனதுகளுக்குள்ளாக்குவதோ அல்லது தடைப்

(மேம் பக்கம் பார்க்க)

'நீதியை நிலைநாட்டும் திறமைக்கு ஊறு ஏற்பட்டுவிடும்'

சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் விளக்கம்

சென்னை, செப். 11—

"இதுவரை இருந்துவருவது போல இனியும் ஆங்கிலம் ஒன்று மட்டுமே உயர் நீதி மன்றங்களிலும், தலைமை நீதி மன்றத்திலும் பயன்படு மொழியாக இருந்துவர வேண்டும்"

என்று, சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துள்ளது.

வழக்கறிஞர்கள் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:—

"தற்போதுள்ள ஏற்பாட்டில் ஏதாவது மாறுதல் செய்தால், நீதியை நிலைநாட்டும் திறமைக்கு ஊறு ஏற்பட்டுவிடும்.

"சட்டம், நடைமுறை முதலியன எல்லா இடங்களிலும் ஒரே சீராகப் பின்பற்றப்பட்டுவரும் நிலைமை பாதிக்கப்பட்டுவிடும். குறிப்பாக முந்தைய தீர்ப்புகளை வழிகாட்டிகளாகக் கொள்ளும் நிலைமை பாதிக்கப்படும்.

"இந்தியை இந்தியாவின் இணைப்பு மொழியாக மாநிலங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகத் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது; இது மிகுந்த கவலையளிப்பதாக இருக்கிறது.

"மொரார்ஜி, இந்தியை இணைப்பு மொழியாகப் பார்ப்பது தென்னிந்திய மக்கள் மனத்தில் பெரும் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

"ஆங்கிலத்தைக் காலவரம் பின்றி ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும்; எல்லா உயர் நீதிமன்றங்களுக்கும், தலைமை நீதிமன்றத்திற்கும் ஆங்கிலத்தை மட்டுமே நீதிமன்ற மொழியாக நீடிக்க வேண்டும். இந்தித் திணிப்புக்கு நாடு முழுவதிலுமுள்ள அறிவாளிகளிடையில் காணப்படும் எதிர்ப்பையும், நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டிய பரந்த நலனையும் எண்ணி இந்திய அரசு இதைச் செய்யவேண்டும்.

"சட்டம், மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய படிப்புகளுக்கு ஆங்கிலத்தையே காலவரம் பின்றிப் பாடமொழியாக நீடித்து வரவேண்டும்."

என்று இங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானம் ஒன்றை ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

"எல்லாச் சட்டங்களையும் இந்தியில் மொழிபெயர்ப்பது நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவதோடு எத்தகைய பலனையும் உண்டாக்காது" என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சிறிய நீதிமன்றங்களில் மட்டும் வட்டார மொழிகளைப் பயன்படுத்தலாம் என்றும், நிதி வசதிக்கேற்ப நிதானமாக எல்லாச் சட்டங்களையும் வட்டார மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யலாம் என்றும், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்'

அறிஞர்கள் 30 பேர் தந்தி

பெங்களூர், செப். 10—

"உயர் நிர்வாகத் துறை மொழியாகவும், கல்வி நிலையங்களில் பாட மொழியாகவும் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்"

என்று வற்புறுத்தி, பெங்களூர் நகரிலுள்ள 30-க்கும் அதிகமான அறிவாளர்கள் தலைமையமைச்சருக்கும், மத்திய கல்வி அமைச்சருக்கும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டுத் தலைவருக்கும் தந்திகள் அனுப்பியிருக்கின்றனர்.

அரசு ஊழியர் கொண்டாடிய வள்ளுவர் விழா

அமைச்சர் மாதவன் பங்கேற்பு

செங்கற்பட்டு மாவட்ட அரசி தழ் பதிவுபெறாத அலுவலர் ஒன்றிப்பின் சார்பில் 4—9—67-ல் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் வள்ளுவர் விழா நடந்தது.

ஒன்றிப்பின் தலைவர் திரு. சு. நாராயணன் தலைமை ஏற்று, 'ஊழியர்களுக்கு அலுவலகத்தில் பணிபுரிவது ஒன்றுதான் தெரிந்தது என்பதல்ல; நாங்களும் நாடு போற்ற இலக்கிய விழா எடுப்போம்; அதற்கான சான்றுதான் வள்ளுவர் விழா' என்றுரைத்தார்.

"டெல்லி சென்று முரசரைந்து வந்து அமைச்சர், வள்ளுவர் படத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தது மாபெரும் நிகழ்ச்சி" என்று விழாவைத் துவக்கிவைத்த மாவட்ட கலெக்டர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி அவர்கள் கூறினார்கள்.

அடுத்து அரசு வழக்குரைஞர் திரு. கோகுலகிருஷ்ணன், வள்ளுவரின் உவமைகளுடன் இலக்கியச் சொற்பொழிவாற்றினார்.

படத்தைத் திறந்துவைத்து அமைச்சர் மாதவன், உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார்.

டெல்லியில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளையும், அரசு ஊழியர் குறைகளை இந்த அரசு அக்கறையுடன் கவனிக்கும் என்றும் கூறினார்.

அமைச்சருக்கு சங்கத்தின் சார்பில் வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது.

வீண் விரயம்தான்!

செங்கற்பட்டு வழக்கறிஞர்கள் கண்டனம்

செங்கற்பட்டு, செப். 10—

"இணைப்பு மொழி, பயிற்சி மொழி, நீதிமன்ற நடவடிக்கைகள் இவைகள் அனைத்திலும் ஆங்கிலம்தான் பயன்படுத்தப்பட வேண்டும்"

திருமங்கலம் பேரூராட்சி

85-வது ஆண்டுவிழா பற்றிய தீர்மானம்

மதுரை மாவட்டம் திருமங்கலம் பேரூராட்சியின் கூட்டத்தில் உறுப்பினரான ஏ.பி.ஆர். சுந்தரபாண்டியன் (தி.மு.க.) கொண்டுவந்த தீர்மானத்தின்படி, பேரூராட்சியின் 85-வது ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாக நடத்துவதுடன், மலர் வெளியிடுவதென்றும் ஒருமனதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களை விழாவிற்கு வந்து சிறப்புரை ஆற்றிடுமாறு கேட்டுக்கொள்ளுவதென்றும், விழாக் குழுவிற்குத் தலைவராக எம். சி. ஏ. இரத்தினசாமித் தேவர் இருப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பேரூராட்சி மன்றத்தில் தமிழ் மறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவரின் உருவப் படம் வைக்கவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

'இந்து' அலுவலகத்திலும், 'சத்தியமூர்த்தி பவன'த்திலும் விவாதிக்க வேண்டாம்!

அது, அந்தந்த நாட்டுக்குரிய பிரச்சினை!

காங்கிரசுக் கட்சியின் கரம், பழி வாங்கும் உணர்ச்சியோடு உலகத்துத் தமிழர்களிடையில் நீளுமானால், அதற்கு உருவமே இல்லாதபடி உருக்குலைத்து விடுவதற்குக் கழகம் விரைந்து பணியாற்றும்!

—தோழன்

மலேசியா தி. மு. கழகமும் தமிழகத் தி.மு. கழகமும்

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

படுத்துவதோ குறித்து நமக்குக் கவலையில்லை; அது, அந்தந்த நாடுகளின் உள்நாட்டு விவகாரம்.

அதேபோல், அங்குள்ள தமிழ் பேசும் மக்கள், அந்தந்த நாடுகளிடம் 'விசுவாசம்' இல்லாமலிருக்கிறார்களா என்பதும் நமக்குத் தேவையில்லாதது.

மலேசியா—சிங்கப்பூர் மக்கள், தங்கள் நாட்டிடம் 'விசுவாசம்' கொள்ளவேண்டும் என்பது குறித்து வலியுறுத்தப்பட வேண்டிய இடம் — வற்புறுத்தப்பட வேண்டிய இடம், அந்தந்த நாடுகள்தான்!

ஆனால், தமிழகத்துக் காங்கிரசுக்காரர்களும், அவர்களுக்கு அனுசரணையாக 'இந்து' இதழும் இங்கு செய்யும் போதனைகள், போக்கிரித்தனமானவை—இலாப நோக்கம் கொண்டவை!

தமிழகத்துத் தமிழர்களே இரண்டாந்தரக் குடிமக்களாகிவிட இருப்பதை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் தி. மு. கழகம், மலேசியா—சிங்கப்பூர் குடிமக்களின் 'விசுவாச உணர்ச்சி'யில் தலையிடுவதாகச் சொல்லிக் கொண்டிருப்பது, மலேசிய மக்களின் 'விசுவாசம்' பற்றிய கவலையைக் காட்டிலும், கழகத்தை அவதூறு செய்வதுதான் முக்கிய நோக்கமெனக் கொள்ள வேண்டியிருக்கிறது!

இந்தியாவைக் காட்டிலும் மற்ற எல்லா இடங்களிலும் தமிழர்கள், மானத்தோடும் மரியாதையோடும், வாழ்க்கை வசதிகள் அளிக்கப்பட்டும் நடத்தப்படுகிறார்கள்.

ஆகவே, இருக்கும் தமிழர்களை இந்திக்கு அடிமையாக்கச் சூழ்ச்சி செய்யும் இந்தியாவில், எங்கெங்கோ இருக்கும் தமிழர்களும் வந்து குவிந்துவிட வேண்டும் என்பதில் கழகத்திற்குக் கொஞ்சமும் நினைப்பில்லை!

ஆப்பிரிக்க நாடுகளில் செல்வந்தர்களாக வாழ்ந்து — செல்வத்தோடு நாடு திரும்பும் இந்தியர்களைக் கருதி, பர்மாவிலும் இலங்கையிலும் கூலிகளாய் - பராரிகளாய் வாழ்ந்த தமிழர்களையும் அழைத்துக் கொள்வதாகக் காங்கிரசு அரசாங்கம் முடிவு செய்தது.

'பர்மா இந்தியர் காங்கிரசு'—'இலங்கை இந்தியர் காங்கிரசு' என்று—இங்குள்ள காங்கிரசுக் கட்சிக்கு வால்பிடிக்கும் அமைப்புக்கள், காங்கிரசு ஆட்சியில் 'தேனும் பாலும் ஓடுவதை'ப் பற்றிச் செய்த பொய்மைப் பிரச்சாரமே, பர்மா—இலங்கையிலிருக்கும் இந்தியர்களைத் திரும்பிவிட ஆசையைத் தூண்டிற்று என்பதை, எந்தக் காங்கிரசுக்காரராவது மறுக்க முடியுமா?

'இந்தியாவில் இறங்கியதும், ரூ. 4,000 தருகிறார்கள்; நாலு காணி நிலம் ஒதுக்குகிறார்கள்' என்று பர்மாவில் நமது தூதுவரகக் காங்கிரசுத் தோழர்களும், பர்மா இந்தியர் காங்கிரசும் செய்த புளுகுணிப் பிரச்சாரமே, பர்மா தமிழர்களை இங்கு வந்து இடர்ப்படச் செய்தது என்பதைக் காங்கிரசுக் கட்சியினர் மறுக்கலாம்—பர்மா அகதிகள் பகிரங்கமாகச் சொல்லுகிறார்கள்!

இவர்கள் பர்மாவிலிருந்து அனுப்பப்பட்டதற்குக் கழகப் பிரச்சாரமே காரணம்—என்று, காங்கிரசுக் கட்சியினர் இன்று அவதூறு செய்கின்றனர்.

கழகம் தோன்றாத நாளிலேயே, காங்கிரசுக் கட்சி ஏடான 'ஆனந்த விகடன்' அங்கு தடை செய்யப்பட்டது 'புதுக் காங்கிரசுத் தலை'களுக்குத் தெரியாது!

இலங்கையிலிருந்தும் விரைவில் திரும்புவதாக இருக்கும் தமிழர்கள் வருகை பற்றியும், கழகத்தையே காரணம் காட்டுகிறார்கள்!

இலங்கைத் தமிழர்களை அழைத்துக்கொள்ளும் ஒப்பந்தம் செய்துகொண்டது யார்? லால் பகதூர் சாஸ்திரி கழகத்துக்காரரா?

சாஸ்திரி — பண்டா ஒப்பந்தத்தின்போது, மறுப்புக் குரல் கொடுத்தது கழகம்.

"ஏன் அவர்களை அழைத்துக்கொள்ள ஒப்புகிறீர்கள்? அவர்கள் தமிழ் பேசலாம்; என்றாலும், அவர்கள் இலங்கையரே! இங்கு அழைத்துக் கொள்ளாவிடில், இலங்கை அரசாங்கம் அவர்களை என்ன செய்கிறதென்பதைப் பார்ப்போம். நாஜிகள், யூதர்களைச் செய்தது போல், விஷப் புகையைப் பாய்ச்சிச் சாகடிக்கிறார்களா, அல்லது இந்துமாக் கடலில் எறிந்துவிடுகிறார்களா என்பதைக் கவனிப்போம்"

என்று, சாஸ்திரி—பண்டாவின் அவசர ஒப்பந்தத்தை எதிர்த்துக் கழகம் குரல் கொடுத்தது!

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து, ஐ. நா. சபைக்கும் போகுமாறு இந்திய அரசாங்கத்தைக் கழகம் வற்புறுத்தியதே தவிர, அவர்களை இங்கு அழைத்துக்கொள்வதை ஆதரித்ததே இல்லை!

"அருகிலுள்ள நட்பு நாட்டுடன், சில்லறைப் பிரச்சினைகளுக்கெல்லாம் நாம் சிணுங்கிக்கொள்ளக் கூடாது" என்பதால், அப்படி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டதாக டெல்லியிலிருந்து சமாதானம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழகத்தில் தோற்றுப் போனதும், காங்கிரசுக் கட்சியினர் கதைத்துக்கொண்டிருப்பதென்ன?

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தமிழர்கள் விரட்டப்படவில்லை. ஆப்பிரிக்க நாடுகளில் அரசபோகத்தில் திளைக்கும் இந்தியர்கள்தான் 'விரட்ட'ப்படுகிறார்கள். ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு இருக்கும் திமிரும் துணிச்சலும், இலங்கை—பர்மா தமிழர்களுக்கு ஒருநாளும் இருக்க முடியாது.

ஆப்பிரிக்க இந்தியர்கள் அவரவர் வசிக்கும் நாட்டிலிருந்து ஓடி வந்துவிடுவதற்குச் சொல்லும் காரணங்களைக் கேளுங்கள்:—

"கென்யா அரசாங்கம், இந்தியர்கள் அனைவரையும், கென்யா குடிமக்களாக மாறும்படி வற்புறுத்துகிறது. கார்களுக்கான லைசென்சு வாங்குவது, கென்யா குடிகளல்லாதாருக்குக் கடினமாக இருக்கிறது. தங்கள் கடையைத் தவிர்த்த மற்ற இடங்களில் சாமான்களை இறக்குவது சிரமமாக இருக்கிறது. இந்தியர் கடைகளில் கென்யா நாட்டுக் குடிகளை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறது. உணவும் உடையும், அரசாங்க ஏஜென்சிகள் மூலமே விற்பனை செய்யவேண்டி ஏற்படுகிறது."

ஆகவே, அந்தந்த நாடுகளைவிட்டு இந்தியர்கள் வெளியேறுகின்றனராம்!

இந்த இந்தியர்களோடு இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வருகின்ற இந்தியர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இங்கு, குடியுரிமை அளிக்குமாறு தனக்குள்ள இராசதந்திர உறவையொட்டிக் கேட்பதற்கு டெல்லிக்கு மனம் இல்லை! அங்கு, குடியுரிமை பெறும்படிக் கட்டாயப்படுத்தப்படுவதற்காக வெளியேறிவிடுவதை, அனுதாபத்தோடு இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

இதிலிருந்து இரட்டை 'விசுவாச'முள்ள குடிகளாக இருக்குமாறு அந்தந்த நாட்டில் கொள்கை வைத்துக் கொண்டிருப்பது காங்கிரசுவாதிகளா? கழகமா?

பர்மா அகதிகளை நாமாகத்தான் தருவித்துக் கொண்டோம்!

இலங்கை அகதிகளை இங்கு வருமாறு வெற்றிலைப் பாக்கு மாற்றி ஒப்பந்தம் செய்துகொண்டதும் காங்கிரசு ஆட்சிதான்!

ஆப்பிரிக்க இந்தியர்களிடையில் இடித்த இடி, பர்மா—இலங்கைத் தமிழர்கள் தலையில் மழையாகப் பொழிந்துகொண்டிருக்கிறது!

இந்த அவலம், மலேசியாவுக்குத் தாவவேண்டாம் என்று காங்கிரசுக் கட்சியினரை எச்சரிக்கை செய்கிறோம்.

தமிழகத்தில் காங்கிரசுக் கட்சி ஆட்சி செய்தபோது, மலேசியா போவதற்குக் கழகத் தோழர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

கழகப் பொருளாளர் கருணாநிதி போன்றவர்களுக்கு, அது எவ்வளவு கடுமையாக அமுல்படுத்தப்பட்டது என்பதை அறிவோம்.

இப்போது கழக ஆட்சி மலர்ந்துவிட்டதால், மலேசியாவுக்குப் போக விரும்பும் கழகத் தோழர்கள், 'தாராளமாகப் போய்வந்து கொண்டிருப்பார்களோ' என்கின்ற வெறும் அச்ச உணர்ச்சியின் காரணமாகவே இங்குள்ள காங்கிரசுக் கட்சியினரும், அவர்களுக்கு அனுசரணையாக இயங்கும் மத்திய அரசாங்கமும். தங்களுக்குத் தோதான அங்குள்ளவர்களைப் பிடித்து 'அரசியல்' விளையாடுகிறார்கள்!

இங்கிருந்து போவதென்பது எளிதாகிவிட்டபோது, 'அங்கிருந்தே ஓர் அச்சத்தைப் பரவவிட்டால் பயன் தரும்' என்ற அற்ப நினைப்பின் விளைவே, இன்று எழுந்துள்ள மலேசியா—சிங்கப்பூர் தி. மு கழகப் பிரச்சினை!

சிங்கப்பூரில் பிரச்சினையைக் கிளப்பிய திருவாளர் எஸ். வி. லிங்கம் என்பவர்தான், அறிஞர் அண்ணா அவர்களைச் சென்னைக்கு வந்து சந்தித்து—வருந்திக் கூப்பிட்டு—மலேசியாவுக்கு அழைத்தவர்!

இந்தத் திருவாளர் லிங்கம் அவர்களைக் கண்டித்து—அப்போது 22—5—65-ஆம் நாளிட்டு மலேசிய இந்தியர் காங்கிரசு இளைஞர் பிரிவு நிறைவேற்றிய தீர்மானம், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களை விமரிசனம் செய்ததாகவே அமைந்திருந்தது.

இப்போது இதே லிங்கம் அவர்கள்தான், பிரச்சினையைக் கிளப்பிப் பேசியிருக்கிறார்.

சிங்கப்பூரின் அரசியலும், அதன் ஆட்சியாளர்களுக்குள்ள தெளிவும் நமக்குத் தெரிகிறது. அங்குள்ள பின்வரிசை அரசியல் வாதிகளை நம்மால் நிதானிக்க முடியவில்லை!

உள்நாட்டில் தமிழ் பேசுவோருக்கிடையில் எழுந்துள்ள தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக வெளிநாட்டின் மதிப்புமிக்க அரசியல் கட்சியையும், அதன் மாண்புமிக்க தலைவரையும் இணைத்துப் பேசவேண்டிய அவசியம் லிங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது வருந்தத்தக்கதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள், மலேசியா நிகழ்ச்சிகளின்போது அரசியல் பற்றி ஒரு சொற்பொழிவிலாவது பேசியிருக்கிறாரா என்பதைத் திருவாளர் லிங்கம் அவர்களைக் கேட்கவில்லை; ஏனென்றால், அது அவருக்குத் தெரியும்! லிங்கம் அவர்களின் பேச்சைப் பெரிதாகப் படம் பிடித்துக் காட்டி, கழகத்திற்கு இங்கு போதனை செய்யப் புறப்பட்டுவிட்ட காங்கிரசுக்காரர்களையும், தலையங்கம் தீட்டிப் பசப்பிய 'இந்து' இதழையும் கேட்கிறோம்!

காங்கிரசுக்காரர்களே!' இந்து'ப் பத்திரிகையே! தமிழர்களின் வாழ்வோடு விளையாடுவதைத் தயவுசெய்து, தமிழகத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்! தமிழர் இருக்கும் இடம் எல்லாம் தேடி ஓடி, அவர்களை வதைக்காதீர்கள்!

நமக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம், மற்ற உலக நாடுகளோடு ஒத்துப் போவதைத் தெரிந்துகொள்வதே தவிர, மற்றவர்களுக்குப் போதனை செய்துகொண்டிருப்பதல்ல!

மலேசியக் குடிமக்களின் 'விசுவாசத்தை'ப் பற்றி மவுண்ட் ரோடு

(தொடர்ச்சி 2-ம் பத்தி பார்க்க)

பொதுக்கூட்டங்கள்

★

14--9--67

காடையாம்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: இரா. மாரிமுத்து; பேசுவோர்; அமைச்சர் முத்துசாமி, ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., எஸ். ஆறுமுகம், கே. ஆர். கோவிந்தன் பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ., ப. பண்டரிநாதன், எஸ். ஏ. அன்புக்கரசு.

புதுக்கோட்டை

6-வது வட்ட தி. மு. க சார்பில் மாலை 6-30 மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: அ. தியாகராசன்; பேசுவோர்; அமைச்சர் கே. ஏ. மதியழகன், அன்பில் தர்மலிங்கம், சிவ. பாலகிருட்டினன், எஸ். அப்துல் மஜீது, ப. செழியன், கே. சிங்கமுத்து, ச. இராசகோபால்.

மதுரை நகர்

கழகத் தோழர்களுக்கு:

"தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாள் விழாவை மதுரை நகரில் மிகச் சிறப்பாகக் கொண்டாட மதுரை நகர் தி.மு. கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

"செப்டம்பர் 17-ம் நாள் ஊர்வல மும், பொதுக்கூட்டமும் நடக்க இருக்கின்றன.

"ஊர்வலத்திலும், பொதுக்கூட் டத்திலும் சட்ட அமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர் கள் கலந்துகொண்டு விழா வினைச் சிறப்பிக்க இருக்கிறார்.

"கழகத் தோழர்கள் செப்டம்பர் 17-ம் நாள், நகர் முழுவதும் அலங்கரிக்கும் வகையில் வர வேற்பு வளைவுகளும், தோரணங் களும் கட்டி விழாவின் சிறப் பைக் கண்டு அனைவரும் வியக் கத்தக்க வகையில் மதுரை மாநகரை அலங்கரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்"

என, நகரச் செயலாளர் கு. திருப் பதி அறிவிக்கிறார்.

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

செப். 14 மாலை 3-30 மணி: ஆசிரியர் சங்க வரவேற்பு—நெல்லை; 4-30 மணி: சைவ சித்தாந்தக் சமுகக் கட்டிடத் திறப்பு—நெல்லை; 6-30 மணி: உயர் நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு —சுருங்குளம்; இரவு 7-30 மணி: பொதுக்கூட்டம்—நெல்லை.

செப். 15 மாலை 5-30 மணி: பராசக்தி மகளிர் கல்லூரி பாரதி விழாவில் கலந்துகொள்ளல்—குற்றாலம்; இரவு 7-மணி: பொதுக்கூட்டம்—தென்காசி.

செப். 16 மாலை 5 மணி: பாளூர் சத்திரம்—அரசினர் உயர்நிலைப் பள்ளியில் வரவேற்பு; 5-30 மணி: கீழப்பாலூர்—விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் துவக்கவிழா; 6-30 மணி: பூலாங்குளம் — சுங்கரடிமேல் உயர் துவக்கப் பள்ளியில் வரவேற்பு; இரவு 7-30 மணி: வீரகேரளம்புதூர்— ஜாராட்சி வரவேற்பும் அண்ணு பிறந்த நாள் விழாவும்; 9 மணி: ஊத்துமலை —அண்ணு பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளல்; 10-மணி: முக்கூடல்—அண்ணு பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ளல்.

செப். 17 காலை 11 மணி: அரம்பொலி—கூட்டுறவு நூற்பாலை பார்வையிடல்; 11-05 மணி: நாகர்கோவில் நூலகக் குழு வரவேற்பு; பகல் 12 மணி: குமரி மாவட்ட ஆசிரியர்கள் சங்க வரவேற்பு—நாகர்கோயில்; மாலை 3 மணி: மார்தாண்டம்; 4-30 மணி: திங்கள்சுரசுந்தை; 5-30 மணி: புதூர்; இரவு 7-30 மணி: நாகர்கோயில்; 9-30 மணி: மயிலாடி அண்ணு பிறந்த நாள் விழாக்களில் கலந்துகொள்ளல்.

முருகு பாண்டியன்

கல்வி நிகழ்ச்சிகள்

செப். 15: திருச்சி; 16: சிங்காமணிதிருச்சி; 17: திண்டுக்கல்; 18: வேடசந்தூர்; 19, 20: கரூர்; 21, 22, 23, 24, 25, 26: ஈரோடு; 27: பொன்மலைப்பட்டி; 28: சீர்காழி; 29: சேத்தூர்; 30: காரைக்கால்.

அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சென்னை, செப். 13—

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இன்று (செவ்) 7-மணிக்கு ஈராமேசுவரம் தூரிக வண்டியில் புறப்பட்டு 14-ந் தேதி காலை 7-மணிக்குப் புதுக் கோட்டை சேருவார்; முன்னுள் சட்டமன்ற உறுப்பினர் காடு வெட்டி தியாகராசன் இல்லத்தில் நடைபெறும் திருமணத்தில் கலந்து கொள்வார்; மாலை 5-மணிக்கு புதுக்கோட்டை இராசா கலேக் கல்லூரி உணவு விடுதியின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைப்பார்; பின், அங்கிருந்து புறப்பட்டு மறு நாள் காலை சென்னை வந்து சேருவார்.

அண்ணு பிறந்த நாள் விழாக்களில் அமைச்சர் மதியழகன்

பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாவில் தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் :—

15—9—67 காலை 8 மணிமுதல் பகல் 1 மணிவரை: ஆயிரம் விளக்குத் தொகுதியில் பல இடங்களில் கொடியேற்றுதலும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங் குதலும்; பிற்பகல் 1-30: மணி முதல் 2 மணிவரை: கருணுநிதி மன்றச் சார்பில் 1000 பேருக்கு உணவு வழங்குதல் — இடம்: பெரியார் சாலை, சென்னை 88-வது வட்டம்; திருவள்ளுவர் மன்றச் சார்பில் 1000 பேருக்கு உணவு வழங்குதல்—இடம்: காமராசர் சாலை, 88-வது வட டம்; மாலை 4 மணி: அனகாபுத்தூர்—உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் படத் திறப்பு விழா; 4-15 மணி: அனகாபுத் தூர் பேரூராட்சி மன்ற வரவேற்பு; 4-30 மணி: அனகாபுத்தூரில் பொதுக்கூட்டம்— தலைமைபேற்றல்; புரட்சி கடிகார மை. ஜி. இராமச்சந்திரன் பேசுவார்; 5 மணி: சென்ரல் பல்கலைக் கழக நூற்றண்டு விழாக் கட்டிடத்தில் உள்ள பட்டமளிப்பு விழா மட்டபத்தில் அகத்துக் கல்லூரிகளின் முதல்வர்கள்—மாணவர்கள் கலந்து கொள்ளும் அண்ணு பிறந்த நாள் விழாத் தலைமை; இரவு 8 மணி: 'அண்ணு கண்ட தமிழக அரசு' கவிதை அரங்கில் தலைமை—இடம்: சென்னை—மயிலை, கீழ்மாடவீதி.

சென்னையில்

கி. மஞ்சுகரன்

எம்.ஏ., எம்.பி.

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

செப். 15: காலையில் அண்ணு பிறந்த நாள் விழாவையொட்டிப் பலவேறு வட்டங்களில் கொடி யேற்றல்; மாலை: 23-வது வட்டம்; 19 மாலை: 12-வது வட்டம்; 20: அப்பாதுரையார் மணி விழா; 36-வது வட்டம்; 21: ஸ்டான்லி மருத்துவமனை நிகழ்ச்சியில் பங் கேற்பு; 47-வது வட்டப் பொதுக் கூட்டம்; 22: 35, 98-வது வட்டப் பொதுக்கூட்டங்கள்; 23: எல்.ஐ. சி. நிகழ்ச்சியில் பங்கேற்பு; 31, 49-வது வட்டப் பொதுக்கூட்டங் கள்; 24: சென்னை 32, 47, 51-வது வட்டப் பொதுக்கூட்டங்கள்; 25: சென்னை 8, 58-வது வட்டப் பொதுக்கூட்டங்கள்; 26: 37-வது வட்டம்; வண்ணப் பகுதிக் கூட் டங்கள்.

கா. வேழவேந்தன்

சுற்றுப்பயணம்

செப். 15: அண்ணு நகர் பிறந்த நாள் விழா; 17: சென்னை கவியரங்கம்; 18: சங்கரபுரம்: 19: எல்லாபுரம் ஒன்றிய சுற்றுப்பய ணம்; 20: மாலை 4 மணி: பட்டாபிராம் உயர்நிலைப் பள்ளி இலக்கிய விழா; மாலை 7 மணி: வில்லிவாக்கம் பொதுக்கூட்டம்; 21, 22: கோவை வட்டக் கூட்டங்கள்; 23, 24: குன்னூர் கழகக் கூட்டங்கள்; 27: குடவாயில் பேட்டை; 30: தேர் வாய்; அக். 1: வேலூர்—தொரப் பாடி.

நடக்க இருப்பவை:

அறிஞர் அண்ணு

பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

15--9--67

நாச்சியார்கோயில்

தி. மு. கழகச் சார்பில் காலை 11 மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர்: அ. சர்புதீன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணி முத்து, மன்னை ப. நாராயண சாமி.

பந்தநல்லூர்

தி. மு. கழகச் சார்பில் மாலை 6 மணிக்கு கடைத்தெருவில்; தலைவர்: சி. மகம்; பேசுவோர்: ஏ. பி. மஜுனம்மணி, பொன். தருமன், பி.ஏ. லிங்கன், போ.மா. வேலன்.

திருச்சி

வள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 9 மணிக்கு கீழ் அரண மேன்ச் சாலை அண்ணு திடலில்; தலைவர்: வ. கிருஷ்ணமூர்த்தி; பேசுவோர்: எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எம். பாலகிருஷ்ணன், ஏ. நடராசன், த. செவகிதிலிங்கம், எஸ். ஜி. கிருஷ்ணன், கு. மதிவாணன். (முருகுபாண்டியன் கல்லை நிகழ்ச்சி நடைபெறும்.)

சிவகாசி

நகர தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: துரைசு கண்ணன்; பேசுவோர்: எஸ். எஸ். தென்னரசு, நன் னிலம் நடராசன், வே. கருணு கரன், எஸ். பி. மணியன், அபுதாலிப், மற்றும் பலர்.

திருவத்திபுரம்

செய்யாறு வட்ட தி மு.க. சார் பில் மாலை 6-30 மணிக்கு சங்கத்தடி திடலில்; தலைவர்: வே. வரதன்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், புலவர் கா. கோவிந் தன், காஞ்சி கல்யாணசுந்தரம், சி. வே. சுப்பராயன், பாபு ஜனார்த்தனன், வி. குட்டியப்பன், வே. சுப்புசாமி.

அனகாபுத்தூர்

தி. மு. கழகச் சார்பில் மாலை 4 மணிக்கு; பேசுவோர்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., பி. சிவசங்கரன் எம்.பி.

திருச்சி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு டவுன் ஆல மைதா னத்தில்; தலைவர்: எம். எஸ். மணி எம்.எல்.ஏ., பேசுவோர்: பொதுப்பணி அமைச்சர் மு. கருணுநிதி, அன்பில் தர்ம லிங்கம், து. ப அமகமுத்து எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ். நெடுமாறன், ஆ. நடராசன். எம். இராமையா பி.ஏ.,பி.எல்., த. செவகிதிலிங்கம், அ. மலர்மன்னன்.

எரியோடு

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு ச. புதூர் காலனியில்; தலைவர்: மு. கார் மேகம்; பேசுவோர்; மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., இரா. மு னியப்பன் எம்.பி.,பி.எஸ்., பெ. ப. சிவம்.

சென்னையில்

அறிஞர் அண்ணு பிறந்த நாள் விழா

மாவட்டச் செயலாளர் அறிவிப்பு

"சென்னை மாவட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாட தோழர்கள் டி. கே. சுபாலு, சு. பாலன், பொன்னுவேலு ஆகியோர் தலைமையில் தனித் தனியாக அமைக்கப்பட்டிருந்த மூன்று குழுக்களும் ஒருங்கிணைந்து ஒரே குழுவாக இயங்கும்"

என மாவட்டச் செயலாளர் நீல நாராயணன் அறிவிக்கிறார்.

திருமணங்கள்

சென்னை 88-வது வட்ட தி.மு.க. செயலாளர் தோழர் க. இளமதி அவர்களின் மைத்துனர் செல் வன: **வே. தட்சிணாமூர்த்திக்கும்—** செல்வி: **திருஞ்சுவேணிக்கும்** 14—9—67 காலை 10-மணிக்கு, வள்ளிய தேனும்பேடை திருவள் ளுவர் சாலை வாசகி இல்லத்தில் பகழ்மொழிப் புலவர் **கா. அப்பா துரையார்** தலைமையில் திருமணம் நடைபெறும்.

★

தோழர் **வெ. தாமோதரன்—** தேரழியர் **கல்யாணி** திருமணம் 14—9—67 காலை 9-மணிக்கு, சிவகங்கை திருப்பத்தார் சாலையி லுள்ள சமூகநல மன்றத்தில் திரு. கோ. **கோவிந்தராசன்** எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

ரோலிட முள்ளேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆலிவரைகளும், வெள்ளிப்பல காகமும், அகிலவரைகளும் கொண்டு, அழகிய அச்சகத்தில் (24, ஞரோநா மை செட்டித் தெரு, சென்னை-1), ஏற்கிடு வெளியிக்கிறோது.

கொளத்தூரில் விவசாயிகள் மாநாடு

அமைச்சர் கோவிந்தசாமி கலந்துகொள்கிறார்

ஒமலூர், மேட்டூர், இடைப்பாடி வட்டார விவசாயிகள் மாநாடு 14—9—67 பிற்பகல் 2-மணிக்கு, கொளத்தூர் சாந்தி டாக்கீசில் திரு. ஜி. பி. சோமசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெறும்; வேளாண்மைத்துறை யமைச்சர் மாண்புமிகு ஏ. கோவிந்தசாமி அவர்கள் கலந்துகொள்வார். சட்டமன்ற உறுப்பினர்களான ஈ. ஆர். கிருஷ்ணன், கே. ஆர். கோவிந்தராசன் பி.ஏ.,பி.எல்., கே. செயராமன் பி.ஏ., எஸ்.ஆறுமுகம், ஏ. ஆறுமுகம், டி. பொன்னுமலை, சி. பழனி, சின்னுசாமி, மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

அமைப்புச் செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

செப். 15: சென்னை; 16: சிவகாசி; 17 காலை: சிவகாசி; மாலை: இரசபாளையம்; 18: முகாரபாளையம்; 19: தவுட்டுப்பாளையம் (கரூர்), கொடுமுடி; 20: கோவை; 21: ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர்; 22, 23: பெரியகுளம் வட கரை; 24: இரணியல், நாகர் கோயில்; 25: சங்கரன்கோயில்; 26: திருத்துறைப்பூண்டி; 27: மீர்ஜாபர், புதுக்கோட்டை; 28: சென்னை; 29 காலை: சென்னை; மாலை: அரக்கோணம்; 30 காலை: சென்னை; மாலை: வந்தவாசி.

நங்கைநல்லூர் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா

நங்கைநல்லூர் அரசினர் உயர் நிலைப் பள்ளி தமிழ் இலக்கிய மன் றத் தொடக்க விழா, 14—9—67 மாலை 8-மணிக்கு எஸ். இராமானு சம் எம்.ஏ.,எம்.ஈ.டி. தலைமையில் நடைபெறும்; புலவர் மா. நன்னன் எம்.ஏ., 'அமைவளர்ந்த செல்வி' என்ற தலைப்பில் பேசுவார்.

'ஜி'-யா? 'சி'-யா?

தலை எழுத்தில் மாற்றமா?

அல்லது

'தமிழர்'தான் மாறிவிட்டாரா?

அச்சுத் தவறு? அல்லது அரசியலில்தான் மாற்றமா?

இந்தி மொழியைப் பரப்பவும் வளர்க்கவும் தலைமையமைச் சர் இந்திரா அதிகாரபூர்மாக அமைத்துக்கொண்டிருக்கும் ஒரு மத்தியக் குழுவில், ஐந்து மத்திய அமைச்சர்கள் உட்பட சேத் தோவிந்த தாஸ்போல் மற்றும் சில உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர் !

அதில், சி. சுப்பிரமணியமும் ஓர் உறுப்பினர் என்று 12—9—67 "மெயில்" இதழ் தெரிவிக்கிறது.

பி. டி. ஐ. நிறுவனத் தகவலே வெளியிட்டிருக்கும் 13—9—67 'இந்து' இதழில், அதுவே, 'ஜி. சுப்பிர மணியம்' என்று இருக்கிறது !

அதே பி.டி.ஐ. நிறுவனச் செய்தியை வெளியிட்டிருக்கும் 13—9—67 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழோ, 'சுப்பிர மணியம்' என்ற மட்டும் பெயரின் தலை எழுத்தினைப் போட்டாமலே செய்தி வெளியிட்டிருக்கிறது !

ஆனுல், 'எக்ஸ்பிரஸ்' குழுவைச் சேர்ந்த 13—9—67 'தினமணி'யோ, 'ஜி. சுப்பிரமணியம்' என்றே வெளி யிட்டிருக்கிறது !

ஜி. சுப்பிரமணியமா (அப்படி ஒரு முக்கிய மனிதர் இருப்தா கத் தெரியவில்லை)

சி. சுப்பிரமணியமா என்பது பற்றி அதிகாரபூர்வமான திருத்தம் வரும்வரையில், 'அச்சில் தவறு'. அல்லது 'தலை எழுத்தில் மாற்றம்' என்றே கொள்வோம் !

ஜி அல்லது—'சி'-தான் என்றுல், 'தமிழர்' எப்படி மாறிவிட்டார்—'அரசியல்' எப்படி மாறிவிட்டது—என்று வருந்துவோம்.